**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

**Case No : CC.No.48/2018**

Prosecution witness: 1

| | | | |
|---|---|---|---|
| Name: | தனராஜ் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused absent. Petition U/s 317 crpc filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 13.06.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது சாமிநாதபுரம் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் உள்ளேன். நான் இதற்கு முன்னர் பழனி தாலுகா காவல் நிலையத்தில் காவலராக பணியில் இருந்தபோது 07.10.2017 ம் தேதி காலை 11.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் செல்வராஜ் நிலையத்தில் இருந்தபோது ரகசிய தகவலாளி நிலையம் ஆஜராகி உதவி ஆய்வாளரிடம் கூறிய தகவலின் அடிப்படையில் அவரது தலைமையில் நானும் சார்பு ஆய்வாளர்-சாந்தி, பெண் முதல் நிலை காவலர்-திருமதி.கீதா ஆகியோர் நிலையத்தில் இருந்து புறப்பட்டு 11.30 மணிக்கு பாப்பம்பட்டி தெற்கு தெருவில் உள்ள எதிரியின் வீட்டின் அருகில் ரகசிய தகவலாளி அடையாளம் காட்டிய நபரை நாங்கள் சுற்றி வளைத்து விசாரித்தபோது அவர் பெயர் விலாசம் கூறினார். அவர் பெயர் மூக்கையா என்று தெரியவந்தது. நாங்கள் அவரிடம் கஞ்சா இருப்பதாக தகவல் வந்துள்ளது. உங்களையும் உங்கள்

கையில் உள்ள கேரி பையையும் சோதனை செய்யவேண்டும் என்றும் கூறி உங்களை நீதித்துறை நடுவரிடமோ, அரசு பதிதழ் பெற்ற அலுவலரிடம் அழைத்து செல்ல உங்களுக்கு உரிமை உள்ளது என்று கூறியபோது அவர் போலீஸ்பார்ட்டியாகிய நீங்களே சோதனை செய்யலாம் என்று கூறினார். அவரிடம் இருந்து சோதனை சம்மத கடிதம் எழுதி கையொப்பம் பெற்றோம். அதில் தனி நபர் சாட்சிகள் எவரும் முன் வராததால் நாங்களே கையொப்பம் செய்தோம். பின்னர் எதிரி ஆஜர்படுத்திய வெள்ளை நிற பிளாஸ்டிக் கேரி பையை பெற்று அதை திறந்து பார்க்க அதில் உலர் நிலையில் கஞ்சா இருந்தது. அதை நாங்கள் எடைபோட்டபோது அது சுமார் 1 கிலோ 100 கிராம் இருந்தது. அதில் இருந்து பகுப்பாய்வுக்காக 50 கிராம் கஞ்சாவை காக்கி பேப்பரில் வைத்து நூலால் கட்டி போலீஸ்பட்டன் சீல் வைத்து விபரங்கள் அடங்கிய துண்டுத்தாள் ஒட்டினோம். அதற்கு S1 என்று குறியீடு செய்தோம் மீதம் இருந்த கஞ்சாவை காக்கி பேப்பரில் வைத்து கட்டி போலீஸ்பட்டன் சீல் வைத்து அத்தாட்சியில் கைப்பற்றினோம். அதற்கு P1 என்று குறியீடு செய்தோம். அத்தாட்சியில் தனி நபரி யாரும் சாடசியாக இருக்க முன்வராததால்நானும் பெண் முதல் நிலைக்காவலரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். மணியம் 13.15 மணிக்கு அவரை கைது செய்வதற்கான காரணம் கூறி கைது செய்து 15.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண் 361/2017, ச/பி 8(C) r/w 20(b)(ii)(B) NDPS Act ஆக வழக்கு பதிவு செய்ய அவருக்கு உதவியாக இருந்தேன். இதுசம்பந்தமாக என்னை சார்பு ஆய்வாளர் விசாரித்தார். சோதனை சம்மத கடிதம் **அ.சா.ஆ. 1** ஆகும். அத்தாட்சி **அ.சா.ஆ. 2** ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தகவல் பற்றி எனக்கு நேரில் தெரியாது. தகவல் வரும்போது காவல்

ஆய்வாளர் நிலையத்தில் இல்லை. நிலையத்தில் இருந்து புறப்படும்போது கிராமநிர்வாக அதிகாரி மற்றும் அவர் உதவியாளரை அழைத்து செல்லவில்லை. காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடம் 9 கிலோமீட்டர் ஆகும். சம்பவ இடத்திற்கு இருசக்கரவாகனத்தில் சென்றோம். அக்கமநாயக்கன்புதுார், கரடிகுட்டம், ஆர்.வாடிப்பட்டி, வழியாக பாப்பம்பட்டி சென்றோம். எதிரியின் வீட்டின் அருகில் சுமார் 50 வீடுகள் இருககும். அங்கு வீட்டில் இருந்த நபர்களை சாட்சியாக இருக்கும்படி உதவி ஆய்வாளர் அழைத்தார் ஆனால் யாரும் சாட்சியாக இருக்க முன் வரவில்லை. சம்பவ இடத்தில் சோதனை சம்மத கடிதம், அத்தாட்சி ஆகியவற்றை தயாரித்தோம். என்னிடம் காட்டப்படும் சோதனை சம்மத கடிதத்தில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். சோதனை செய்ய கோரும்படி உமக்கு உரிமை உள்ளது என்று நான் கூறிய வாசகம் சோதனை சம்மத கடிதத்தில் இல்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தில் 12.00 மணி என்றுநேரம் குறிப்பிட்ட பகுதியில் வெள்ளை நிற அழிப்பான் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆய்வு நமூனா எதுவும் சம்பவ இடத்தில் தயாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். கைது நமூனா தயாரித்தார்களா என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் சுமார் 2 ½ மணிநேரம் இருந்தோம். நிலையம் வந்த பின்னர் தான் குற்ற எண் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அத்தாட்சியில் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் வெள்ளை நிற பிளாஸ்டிக் கேரி பை என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரவுண் கலர் தாளில் கட்டி சீல் வைத்தோம் என்று அத்தாட்சியில் குறிப்பாக கூறப்படவில்லை என்றால் சரிதான். சிறப்பு குறியீடுகள் செய்யப்பட்ட விபரமும் அத்தாட்சியில் கூறப்படவில்லை என்றால் சரிதான். மாதிரி பொட்டலம் எடுக்கப்பட்ட

விபரத்தை அத்தாட்சியில் குறிப்பாக கூறப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் நேரம் வெள்ளை நிற அழிப்பானால் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அத்தாட்சியின் நகல் எதிரிக்கு வழங்கியதாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். பயன்படுத்தப்பட்ட மாதிரி பட்டன் சீல் அத்தாட்சியில் பதிக்கப்படவில்லை என்றால் சரிதான். பட்டன் சீல் பதிக்கப்பட்டடதாகவும் அத்தாட்சியில் காணப்படவில்லை என்றால் சரிதான். அத்தாட்சிய்ல நிலைய குற்ற எண் 361/2017 காணப்படுகிறது என்றால் சரிதான். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சோதனை சம்மத கடிதம் எதையும் தயார் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அவற்றிற்கு ஆதரவாக ஆவணங்களை தயாரித்து அதற்கு ஆதரவாக சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்னதுபோல் எந்த ரோந்துக்கும் செல்லவில்லை என்றும் முதல் விசாரணையில் சொல்ல பட்ட இடத்தில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் உதவி ஆய்வாளர் பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருளுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.